[2019 பிப்ரவரி 14

(எ) தஞ்சை மாவட்டம், சர்க்கரை ஆலைகள், கரும்புக்கான நிலுவைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்திக்கு அடுத்து விவசாயிகள் அதிகம் உற்பத்தி செய்வது கரும்பு. என்னுடைய தொகுதியில் கோட்டூரில் இருக்கக்கூடிய அம்பிகா சர்க்கரை ஆலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தொகுதியில் இருக்கக்கூடிய திருஆரூரான் சர்க்கரை ஆலை, இந்த இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு உற்பத்தியாளர்கள் வெட்டி அனுப்பிய கரும்புக்குரிய நிலுவைத் தொகை கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. எனவே, அதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(ஏ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகரம், மேம்பாலம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகரத்தில் மேம்பாலம் அமைப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது. அவ்வாறு மேம்பாலம் கட்டினால் மிகுந்த பாதிப்பு ஏற்படும். அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. வியாபாரிகள் மற்றும் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அப்படிப்பட்ட திட்டத்தைக் கைவிட. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதனால்தான் விளக்கமாகப் பேசக் கூடாது என்று சொன்னேன். நீங்கள் விதி 55-ன்கீழ் என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதைச் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி உட்காருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிறேன், சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்கிட . . .*